# நமது ஈழநாடு

www.namathueelanadu.com

குரல் 04 மலர் 42 டிசம்பர் 2023 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com

Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app

*மக்களின் துன்ப துயரங்களில் பங்கு கொண்டு, அவர்களது கஷ்டங்களைப் போக்குதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றுவதுதான் உண்மையான அரசியல் வேலை*

- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்








**சுரேந்திரன், சுமந்திரன், ரணில் ஆகிய மூவருக்கும் இடையில் நட்புறவுகள் இருப்பதொன்றும் புதிய விடயமல்ல. நல்லாட்சிக் காலத்திலிருந்து அது நீடித்து வருகின்றமை பரகசியமானதே. எனினும் அண்மைக்கால சுமந்திரன் ரணில் மோதல் தான் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஆனால் உலகத்தமிழர் பேரவையின் சிறிலங்கா விஜயத்துடன் அந்த 'மோதல்' குறித்து சிறந்த புரிதல் ஏற்பட்டுள்ளது.**

# அம்பலமான உறவு






10:34
GTF Statement - Following the launch of the 'Himalaya Declaration', the proposed "National Conversation" among communities in Sri Lanka and Diaspora will continue with much vigour and purpose

From suren.surendiran@gmail.com
To Suren & 1 more
Today at 6:54pm

Dear All,

Please find below and attached both in Word and in PDF formats, a formal statement issued by the Global Tamil Forum (GTF).

Also included is the joint statement by Sangha for Better Sri Lanka (SBSL) and the Global Tamil Forum (GTF) that was issued when the Himalaya Declaration (also attached) was made public a few days ago.

Thank you.

Kind Regards,

Spokesperson Tamil National Alliance: **Hon. M A Sumanthiran MP**
Tel: +94 (0) 77 731 4628
Email: ma.sumanthiran@gmail.com
Twitter: @TNAmediaoffice & @MASumanthiran

Spokesperson Global Tamil Forum: **Suren Surendiran**
Tel: +44 (0) 7958 590196
Skype: **surendirans**
Email: secretary@globaltamilforum.org
Twitter: @GTFonline & @surendirans

Delete Archive Move Reply all More





**தேசிகன்**

இம்மாதத்தின் முதல்வாரத்தில் சிறிலங்காவுக்கு வந்திறங்கிய உலகத்தமிழர்பேரவை சிறந்த சிறிலங்காவுக்கான சங்க மன்றத்தினருடன் இணைந்து பெருமெடுப்பிலான தேசிய நல்லிணக்க கலந்துரையாடலொன்றை உருவாக்கவுள்ளதாக கூறிக்கொண்டு பல்வேறு சந்திப்புக்களையும் நடத்திவிட்டு மீண்டும் சிறிலங்காவை விட்டு புறப்பட்டு விட்டனர்.

இனி, தேசிய கலந்துரையாடல் யாரால் யாருடன் நடைபெறும் என்பதெல்லாம் அவர்களுக்குத் தான்வெளிச்சமாக உள்ளது. அத்தோடு, அவர்கள் கொண்டு வந்த இமயமலைப்பிரகடனம் கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி நேபாளத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.

இந்தப் பிரகடனத்தில் அம்பகஹபிடிய தரப்பு அனுநாயகர் மாதம்பாகம அசாஜி திஸ்ஸ தேரர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண பிரதம சங்கநாயக்கர் சியம்பலாகஸ்வெவ விமலசார தேரர், ஸ்ரீ தர்மரஷக்ஷித தரப்பு பொது செயலாளர் கிதலகம ஹேமசார நாயக தேரர் வஜிர வண்ச தரப்பு செயல் மகாநாயகர் பேராசிரியர்.பல்லேகந்த ரத்னசார தேரர், சிறிலங்கா மனித உரிமைகள் ஆணைக்குழு ஸ்ரீ சத்தர்மவண்ச தரப்பு, உறுப்பினரும் மனித வள மேம்பாட்டு மையத்தின் தலைவருமான கலுபஹன பியரதன நாயக தேரர், மத்திய மாகாணத்தின் பிரதம சங்கநாயக தேரரான நாரம்பனாவே தம்மாலோக தேரர், ஸ்ரீ சதமவண்ச தரப்பு அனுநாயக்கர் வலதர சோபித தேரர்; ஆகியோர் கையொப்பமிட்டுள்ளர்.

அதேநேரம், உலகத்தமிழர் பேரவையின் சார்பில் வேலுப்பிள்ளை குகனேந்திரன் கலாநிதி. சாந்தினி ஜெயராஜா, தனபாலசிங்கம் சுரேந்திரன், சிறிகாந்தா பவகுகன் கலாநிதி.கண்ணப்பர் முகுந்தன், பிரகாஷ் ராஜசுந்தரம், ராஜ் தவரட்ணசிங்கம் ஆகியோரும் கையொப்பமிட்டுள் ளனர்.

உப்புச்சப்பில்லாத பிரகடனத்தில் யார் கையொப்பமிட்டிருந்தால் என்ன? ஆனால் உலகத்தமிழர் பேரவை பற்றி சிறுவரலாற்றுப் பின்னணியைப் பார்க்க வேண்டியுள்ளது.

2009 ஆம் ஆண்டில், தமிழ் இனப்படுகொலையின் உச்சக்கட்டத்தில், உலகெங்கிலும் உள்ள தமிழ் அமைப்புகள், அனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உலகளாவிய தமிழ் புலம்பெயர் அமைப்பொன்றை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தன.

அதற்கமைவாக, தமிழ் மக்களின் நியாயமான மற்றும் அடிப்படை அபிலாஷைகளை முன்னேற்றுவதற்காக உலகத்தமிழர் பேரவையானது, கடந்த 2009 செப்டெம்பரில் பிரான்ஸின் பாரிஸில் உருவாக்கப்பட்டது. இதில் உலகத் தமிழர் பேரவை 10 ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட 14 நாடுகளை சேர்ந்த அமைப்புகளின் பிரதிநிதித்துவத்துடன் உருவாக்கப்பட்டது.

அவ்வமைப்பு உருவாக்கப்பட்டு ஒரு சில ஆண்டுகளுக்குள், உலத் தமிழர் பேரவை ஒரு சில நபர்களால் ஜனநாயகமற்ற முறையில் நகர்த்தப்பட்டு, தமிழ் மக்களின் நியாயமான மற்றும் அடிப்படையான அபிலாஷைகளிலிருந்து விலகிச்சென்றது.

இதனால், உலக தமிழர் பேரவையிலிருந்து பலர் தற்போது பிரிந்து விட்டனர். குறிப்பாக, பிரிட்டிஷ் தமிழ் மன்றம், அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், யு.எஸ்.ரி.பி.ஏ.சி. என முன்பு அறியப்பட்ட யுனைற்றட் ஸ்ரேற்ஸ் தமிழ் அக்ஷன் குறூப் (யு.எஸ்.ரி.ஏ.ஜி.) போன்றவை உலக தமிழர் பேரவையிலிருந்து விலகிவிட்டன.

கனடிய தமிழ் காங்கிரஸ் தவிர ஏனைய அனைத்தும் அமைப்புக்களும் உலத்தமிழர் பேரவையிலிருந்து வெளியேறின. இதனையடுத்து உலத்தமிழர் பேரவை புலம்பெயர் தமிழ் மக்களின் அடிப்படை ஆதரவின்றி இருந்தது. எனினும் அதன் தலைமையை அருட்தந்தை இமானுவேல் வைத்திருந்தார். அவருக்கு துணையாக சுரேன் சுரேந்திரன் செயற்பட்டார்.

இவர்கள் இருவரைத் தவிர அந்த அமைப்பில் பெரும்புள்ளிகள் என்று கூறுவதற்கு யாரும் இருந்திருக்கவில்லை. இந்த இருவரும், சிறிலங்காவில் தமிழ்த் தேசிய அரசியலை மென்வலுவாக நகர்த்த முற்பட்ட, நகர்த்திக்கொண்டிருக்கின்ற எம்.ஏ.சுமந்திரனுடன் நெருக்கமாகச் செயற்பட ஆரம்பித்தனர்.

விசேடமாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட தீர்மானங்களில் சுமந்திரனின் முடிவும் அறிவிப்புக்களுக்கும் வலுச்சேர்க்கும் வகையிலேயே அமைந்திருந்தன என்பது பரகசியமானது.

பின்னரான காலத்தில், அருட்தந்தை இமானுவேல் உலகத்தமிழர் பேரவையிலிருந்து விடுபட்டு தாயகம் திரும்பியதோடு அவரது வயது முதிர்ச்சி காரணமாக ஓய்வெடுக்கும் நிலைக்குச் சென்றார்.

எனினும் அருட்தந்தை இம்மானுவேல் நல்லாட்சிக்காலத்தில் சிறிலங்காவுக்குச் சென்றபோது, அப்போது அரசாங்கத்துடன் தேன்நிலவு கொண்டாடிக்கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (இலங்கைத் தமிழரசுக் கட்சி) தலையீட்டால் அப்போது பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போக்குவரத்துக்கான வாகன வசதிகள் மற்றும் பாதுகாப்பு பிரிவினையும் வழங்கியிருந்தமை மறக்க முடியாதவொரு விடயமாகின்றது.

குறிப்பாக, அக்காலத்தில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுமந்திரன், உலகத்தமிழர் பேரவை பிணைப்பென்பது மிகவும் உயர் மட்டத்தில் இருந்தது. இதில் மறைந்த மங்கள சமரவீரவுக்கும் பெரும்பங்கிருந்தது.

இத்தகைய உறவுகளைப் பேணிவந்திருந்த உலகத்தமிழர் பேரவை தற்போது சுரேன் சுரேந்திரன் தலைமையில் சிறிலங்காவுக்குச் சென்றிருந்தது. அதேநேரம், ஆட்சியில் இருப்பவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதும் கவனிக்கத் தக்கது.

இவ்வாறான நிலையில், உலகத்தமிழர் பேரவையானது, அடுத்து ஜனாதிபதி தேர்தல் வரவிருக்கின்ற நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெள்ளையடிப்புச் செய்வதற்காகவே இமயமலைப்பிரகடனத்துடன் ஓடித்திரிகிறது என்ற கருத்து பரவலாக வெளிப்படுத்தப்பட்டது.

இந்த விமர்சனம் தமிழ்த் தேசிய அரசியலில் அதீதமான தாக்கத்தைச் செலுத்தவும் உடனடியாக விழித்துக்கொண்ட சுமந்திரன், தன்னுடைய தமிழரசுக்கட்சியின் தலைமைக்கான கனவை அது தகர்த்துவிடுமோ என்ற அச்சத்தினால் அறிக்கையொன்றை தடாலடியாக விடுத்தார்.

தனக்கும் உலகத்தமிழர் பேரவையின் செயற்பாடுகளுக்கும் எவ்விதமான தொடர்புகளும் இல்லை என்று அவர் அறிவித்தார். அதுமட்டுமன்றி, அவர் அந்த அறிவிப்பில், ஜனாதிபதி ரணிலுக்கும் உலகத்தமிழர் பேரவையின் செயற்பாடுகளுக்கும் இடையில் தொடர்புகள் இல்லையென்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது அண்மைக்காலமாக கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தி வரும் சுமந்திரன், திடீரென்று அவருக்காக ஆஜராகி கருத்துக்களை வெளியிட்டமையானது சுமந்திரன் இரட்டை வேடம் போடுகின்றாரா என்ற இயல்பான சந்தேகத்தை ஏற்படுத்துவதாக இருந்தது.

எனினும், தற்போது அந்த சந்தேகம் முழுமையாக வெளிப்பட்டுள்ளது. குறிப்பாக உலகத்தமிழர் பேரவை 20ஆம் திகதி வெளியிட்ட ஊடக அறிவிபொன்றினால் மிகத்தெளிவாக சுமந்திரனுக்கும் சுரேந்திரனுக்கும், உலகத்தமிழர் பேரவையின் செயற்பாடுகளுக்கு இடையிலான தொடர்புகள் மற்றும் உறவுகள் என்னவென்பது மிகத்தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, சுமந்திரன், சுரேந்திரன் உறவுகள் இருப்பதென்பது ஒன்றும் ஆச்சரியப்படக்கூடிய விடயமல்ல. ஆனால், தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாத இமயமலைப்பிரகடனத்தின் பின்னால் சுமந்திரனும் உள்ளார் என்பது தான் இங்குள்ள முக்கிய விடயமாகின்றது.

ஏனென்றால் அடுத்த மாதம் நடைபெறுகின்ற தலைமைக்கான தேர்தலில் சுமந்திரன் வெற்றிபெறுவாராக இருந்தால், இமயமலைப் பிரகடனத்தை ஆதரிக்கும் அவரால் எவ்வாறு தமிழ்த் தேசிய கோட்பாட்டு அரசியலைக் கொண்டு நகர்த்த முடியும் என்ற கேள்வி எழுகின்றது.

ஈற்றில், தமிழ் மக்களின் தேசம் சார்ந்த தேசியக் கோட்பாடு தேசிய நல்லிணக்க கலந்துரையாடல் என்ற பெயரால் தென்னிலங்கையின் ஒற்றையாட்சிக்குள் கரைந்து விடுமோ என்கின்ற இயல்பான அச்சமும் ஏற்படுகின்றது.

அதுமட்டுமன்றி, புளொட் தலைவர் சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை உலகத் தமிழர் பேரவையுடனான சம்பந்தனின் இல்லச் சந்திப்பில் கலந்துகொள்வதற்கான முதல் அழைப்பினை விடுத்தவர் சுமந்திரனே.

ஆகவே, சுமந்திரனுக்கும் உலகத்தமிழர் பேரவையின் செயற்பாடுகளுக்கும் இடையில் எவ்விதமான தொடர்புகளும் இல்லையென்று கூறுவதானது, தமிழர்கள் தலையில் மிளகாய் அரைக்கும் செயற்பாடு என்று பகிரங்கமாகவே குறிப்பிட முடியும்.

இதுவொருபுறமிருக்கையில், உலகத்தமிழர் பேரவையின் செயற்பாடுகளின் பின்னணியில் சுவிட்சர்லாந்தின் நிதியுதவி இருப்பதோடு, அந்நாட்டின் சிறிலங்காவுக்கான முன்னாள் தூதுவர் மார்ட்டின் ஸ்டூவர்ட்ஸிங்கரும் உள்ளார். அத்தோடு கொழும்பை மையமாகக் கொண்டு செயற்படும் சிவில் அமைப்பின் சர்ச்சைக்குரிய செயற்பாட்டாளரான விசாகா தர்மதாசவும் உள்ளார்.

இவர், நீண்டகாலமாகவே பௌத்த தேரர்கள் மற்றும் ரணில் தரப்பில் நல்லுறவுகளைக் கொண்டுள்ளதால் அவரைப் பயன்படுத்தி சிறிலங்காவினுள் சந்திப்புக்களுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் உலகத்தமிழர் பேரவை மேற்கொண்டிருக்கின்றது.

சுமந்திரன், சந்திப்புக்குறித்த ஏற்பாடுகள் விடயத்தில் தலையீடுகளைச் செய்தால் விடயம் அம்பலமாகிவிடும் என்ற நல்லெண்ணத்தில் தான் விசாகா தர்மதாச ஊடாக காய்கள் நகர்த்தப்பட்டுள்ளதாக தகவல்.

ஆக, சுவிட்சர்லாந்து, தென்னாபிரிக்கா, ஜப்பான் கூட்டிணைவில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை ஸ்தாபிப்பதற்கான முனைப்புக்கள் காண்பிக்கப்படும் ஏக நேரத்தில் தேசிய கலந்துரையாடல் என்ற போர்வையில் அபிலாஷைகளையும், பொறுப்புக்கூறலையும் துறந்து மறப்போம் மன்னிப்போம் என்ற நிலைப்பாட்டில் தென்னிலங்கையுடன் தாயகத்தை கலக்கச் செய்யும் உத்தியின் ஒரு அங்கத்தை உலகத்தமிழர் பேரவை மற்றும் சுமந்திரன் ஊடாக நகர்த்தியிருக்கின்றார் ரணில் என்பது தான் விடயம்.

# தன்னாட்சியே தமிழ் ஈழருக்கு விடுதலை





தீபச்செல்வன்

தமிழ் ஈழர்கள் தன்னாட்சி உரிமைக்காக கடந்த எழுபது வருடங்களுக்கு மேலாக போராடி வருகிறார்கள். ஈழத் தமிழ் மக்கள் மாத்திரமின்றி, உலகின் எந்தவொரு இனமும் தன்னாட்சி உரிமையை கோரும் உரித்துடையவையே. இதனை மறுக்க இந்த உலகில் எவருக்கும் உரிமை கிடையாது. இலங்கைத் தீவில் ஈழத் தமிழ் மக்கள் தம்மை தாம் ஆண்ட பாரம்பரியத்தையும் இறைமையையும் கொண்டவர்கள். வரலாறு முழுவதும் தமிழ் ஈழர்களுக்கு எதிராக நடந்த இனப்படுகொலைகளும் ஒடுக்குமுறைகளும் உரிமை மறுப்புக்களும் ஈழத் தமிழ் மக்களுக்கு தன்னாட்சி அதிகாரம் உண்டு என்பதை எடுத்துரைக்கின்றன. அண்மைய நாட்களில் பன்னாட்டு சூழலில் தமிழ் ஈழரின் தன்னாட்சி உரிமை குறித்த ஆதரவுக் குரல் ஒன்று எழுந்துள்ள நிலையில் அதனைக் குறித்து இன்னமும் கவனம் கொள்ள வேண்டியுள்ளது.

### ஈழத் தமிழருக்கு தன்னாட்சி உண்டு

ஈழத் தமிழ் மக்களுக்கு தன்னாட்சி அதிகாரம் அவசியம் என்று பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் மார்ட்டின் டே கூறியிருக்கிறார். பிரிட்டன் பாராளுமன்றத்தில் இலங்கையில் மனித உரிமை நிலவரம் குறித்து நடந்த விவாதத்தில் பங்கு கொண்டு உரையாற்றி சமயத்தில் ஸ்கொட்டிஸ் தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மார்ட்டின் டே இந்தக் கருத்தை கூறியிருப்பது, ஈழத் தமிழ் மக்களின் தன்னாட்சிக் கோரிக்கைக்கு ஆதரவான உலகக் குரலாகும். அத்துடன் ஸ்ரீலங்கா அரசு, பொறுப்புக்கூறலிற்கான பாதையையோ அல்லது உரிய சாட்சியங்கள் பாதுகாப்பு பொறிமுறையையோ ஏற்படுத்தாது என்ற அக்கறை காணப்படுவதாவும் அவர் குறிப்பிட்டுள்ளதும் இலங்கையின் உண்மை நிலவரமாகும்.

இலங்கை தூதரகத்தின் ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு மற்றொரு விடயத்தை மார்ட்டின் கவனப்படுத்தியுள்ளார். நவம்பர் 2023 வரை காணாமல்போனவர்களின் அலுவலகத்தின் தேடும் பிரிவினர் காணாமல்போனதாக தெரிவிக்கப்பட்டவர்களில் 16 பேரை உயிருடன் கண்டுபிடித்துள்ளனர் 3 பேர் உயிரிழந்துள்ளதை கண்டுபிடித்துள்ளனர் என இலங்கை தூதரகம் தனது ஆவணத்தில் தெரிவித்துள்ளது. 18000 தமிழர்கள் இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்டதாக நம்பபடுகின்றது அப்படியானால் ஏனையவர்களிற்கு என்ன நடந்தது அவர்கள் எங்கிருக்கின்றார்கள் அவர்கள் குறித்து தெரிவிப்பதற்கு என்ன ஆவணங்கள் உள்ளன? என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

### ஈழத்தில் நடந்த இனப்படுகொலை

இதேவேளை, இலங்கை அரசு மேற்கொண்ட இனப்படுகொலைப் போரில் ஒரு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து அறுநூற்று 97பேர் இனப்படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த எண்ணிக்கையை இலங்கை அரசும், சில நாடுகளும் ஐ.நா அமைப்பும் குறைத்துச் சொல்லி வருகின்ற நிலையில், பன்னாட்டு பாராளுமன்ற உறுப்பினரான மார்டின் டே ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளமையை தனது உரையில் ஏற்றுப் பதிவு செய்துள்ளமையும் இங்கு முக்கியமானது. ஐ.நாவின் கருத்தின் அடிப்படையில் இதனை அவர் பதிவு செய்திருப்பதும், உண்மையில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை என்ன என்பதை கண்டறிய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியதும் கவனிக்க வேண்டியதாகும்.

அத்துடன், “ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரை இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட முக்கிய குற்றவாளிகளான சவேந்திரசில்வா மற்றும் இலங்கையின் ஏனைய குற்றவாளிகளுக்கு எதிராக பிரிட்டன் உட்பட உலக நாடுகள் தடைகளை விதிக்கவேண்டும் என தெரிவித்துள்ளது.பாரிய அநீதிகளில் ஈடுபட்டவர்கள் பிரிட்டனிற்குள் வரஅனுமதிக்கப்படமாட்டார்கள் என காண்பிப்பதன் மூலம் பிரிட்டன் அமெரிக்கா, கனடாவின் நடவடிக்கைகளிற்கு ஆதரவளிக்கலாம்” என்றும் அவர் குறிப்பிட்டிருப்பதும், பன்னாட்டு சூழலில் ஈழத் தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதில், முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையையும் தருகிறது.

### தன்னாட்சி அல்லது சுயநிர்ணயம் என்பது

தன்னாட்சி அல்லது சுயநிர்யணம் என்றால், ஒரு மக்கள் குழு அல்லது ஒரு இனம், சுயமாக, சுதந்திரமாக தமது அரசியல் ஏற்பாட்டைத் தீர்மானிக்கும் உரிமையாகும். தன்னாட்சி என்ற சொல்லைக் காட்டிலும் சுயநிர்யண உரிமை என்ற சொல்லே தமிழ் சூழலில் அதிகமும் பயன்பாட்டில் உள்ளது. அந்த அடிப்படையில் ஈழத் தமிழ் மக்கள் கடந்த எழுபது வருடங்களுக்கு மேலாக சுயநிர்யண உரிமையைக் கோரி வருகிறார்கள். சுய நிர்ணய உரிமையைக் கோரும் உரித்துடையவர்கள் ஈழத் தமிழ் மக்கள் என்பதை கடந்த காலத்தில் ஆயுதப் போராட்டத்திற்கு முந்தைய தலைவர்களும் சரி, ஆயுதப் போராட்டமும் சரி, ஆயுதப் போராட்டத்திற்குப் பிந்தைய தலைவர்களும் சரி வலியுறுத்தி வருகின்றனர்.

“வெளி வற்புறுத்தல்கள் இன்றி ஒருவர் தனது செயல்பாடுகளைத் தானே தெரிவு செய்துகொள்வதற்கு, சிறப்பாக, ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்கள் தமது சொந்த அரசியல் நிலையை முடிவு செய்து கொள்வதற்கு அல்லது தமது தற்போதைய நாட்டில் இருந்து விடுதலை அடைவதற்கு, அவர்களுக்கு உள்ள சுதந்திரமே தன்னாட்சி உரிமை” என்றும் வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபை தன்னாட்சி குறித்து கூறும் விடயமும் முக்கியமானது. “அனைத்துலக குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான ஒப்பந்தம் (ICCPR), பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளுக்கான அனைத்துலக ஒப்பந்தம் (ICESCR). ஆகிய இரண்டு ஆவணங்களும் உறுப்புரை 1 இல் பின்வருமாறு கூறுகின்றன: “எல்லா மக்களுக்கும் தன்னாட்சி உரிமை உண்டு. இந்த உரிமையைப் பயன்படுத்தி, அவர்கள், சுதந்திரமாகத் தமது அரசியல் நிலையை முடிவு செய்து, தமது பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சிகளைத் தேடிக் கொள்வர்.” என்ற கருத்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனத்திலும் தன்னாட்சி குறித்து பதிவு செய்திருக்கிறது. “ஒரு தேசிய இனத்தினராக இருக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. (2) எவரினதும் தேசிய இனத்துவம் மனப்போக்கான வகையில் இழப்பிக்கப்படுதலோ அவரது தேசிய இனத்துவத்தை மாற்றுவதற்கான உரிமை மறுக்கப்படுதலோ ஆகாது.” என்று கூறப்பட்டுள்ளது.

### தன்னாட்சியே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

பிரித்தானியர்கள் இலங்கைத் தீவை விட்டு வெளியேறியபோது, ஒன்றுபட்ட இலங்கைக்காக ஈழத் தமிழ் மக்கள் உழைத்தார்கள். ஒத்துழைத்தார்கள். அங்குதான் ஈழத் தமிழ் மக்களின் இறைமையும் தன்னாட்சியும் பறிபோனது. அதிகாரத்தைக் கைப்பற்றிய அன்றைய சிலோன் அரசு, ஈழத் தமிழ் மக்கள்மீது இன ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்டது. 1956இல் தனிச்சிங்களச் சட்டம் சிங்களப் பேரினவாத்தின் கொடுமுகத்தை தமிழ் ஈழ மக்கள்மீது வெளிப்படுத்தியது. அதற்கு எதிராக ஈழத் தமிழ் மக்கள் அகிம்சை வழியில் போராடிய வேளையில் அதற்கும் வன்முறையே பதிலாக பாய்ந்தது இலங்கையின் கடந்த கால வரலாறு ஆகும். அது மாத்திரமின்றி சுதந்திரத்திற்குப் பிந்தைய இலங்கை தமிழ் ஈழர்களின் இனப்படுகொலைக் குருதியால் நனைந்தது.

இதேவேளை சிங்கள தேசத்துடன் இணைந்து வாழ முடியாது என்பதனாலும், தமிழ் மக்கள் தம்மை தாமே ஆள்கின்ற சுயநிர்ணய உரிமை கொண்ட இனமாக வாழ்வதன் ஊடாகவே இனப்படுகொலையில் இருந்தும் ஒடுக்குமுறையில் இருந்தும் தப்ப முடியும் என்ற நிலையில், தனிநாடு கோரிய போராட்டம் முகிழ்ந்தது.

அன்றைய தமிழீழ அரசில் தமிழ் ஈழர்கள் பாதுகாப்பாக வாழ்ந்தமை தன்னாட்சி குறித்த அவசியத்தை இன்னமும் உணர்த்தியது. இந்த நிலையில் முள்ளிவாய்க்கால் படுகொலையின் பின்னரும் தன்னாட்சி ஒன்றுதான் தமிழ் ஈழருக்கு விடுதலை என்பதை காலம் உணர்த்துகிறது. அதுவே விடுதலையின் ஒற்றைப்பாதையாகும்.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 04 மலர் 42 டிசம்பர் 2023 மின்னஞ்சல் contact@namathueelanadu.com

# இனியும் பேச்சுக்குச் செல்வது வீணானது

வடக்கு, கிழக்கு தமிழ் பிரதிநிகளுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையொன்று கடந்த 21ஆம் திகதி நடைபெற்றிருந்தது. இந்தப் பேச்சுவார்த்தையில் சம்பந்தன், சாணக்கியன், கலையரசன், கோவிந்தம் கருணாகரம் ஆகியோர் மட்டுமே வடக்கு,கிழக்கினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டிருந்தனர்.

ஏனைய எவரும் இப்பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்கு பெரும் ஆர்வத்தைக் கொண்டிருக்கவில்லை. இதில் ஆளும் தரப்பின் அங்கத்துவங்களான, டக்ளஸ், திலீபன், சந்திரகாந்தன்(பிள்ளையான்), வியாழேந்திரன், உள்ளிட்டவர்கள் கூட பங்கேற்றிருக்கவில்லை.

அதேநேரம், ஒற்றையாட்சிக்குள் இனப்பிரச்சினைகுறித்த எந்தப்பேச்சுவார்த்தைக்கும் தயாரில்லை என்பதில் உறுதியாக உள்ள கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு இம்முறை அழைப்புக்கூட விடுக்கப்படவில்லை.

இந்த நிலைமையில் குறித்த பேச்சுவார்த்தை எவ்வளவு முக்கியமானது என்பது வெளிப்பட்டிருக்கின்றது. அத்துடன், வழமை போன்றே நிகழ்ச்சிநிரலின்றி முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கியமானதொரு விடயத்தினை தன்னை மறந்துதான் கூறிவிட்டார் போலத் தெரிகின்றது.

அதாவது, தற்போதைய பாராளுமன்றத்திற்கோ, தனக்கோ இனப்பிரச்சினை தீர்வு அதிகாரப்பகிர்வு தொடர்பிலான விடயங்களை முன்னெடுப்பதற்கு மக்கள் ஆணை இல்லை என்பதால் அடுத்த பாராளுமன்றத்தில் தான் அதுபற்றி கரிசனை கொள்ள முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று, புதிய பாராளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பொன்று ஒருவருட காலத்துக்குள் கொண்ட வரப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார். ஆக, ஜனாதிபதி ரணிலால் இனப்பிரச்சினை விடயம் பற்றி 2026வரையில் கதைப்பதற்கு அருகதை இல்லை என்பது வெளிப்படையான விடயமாகின்றது.

இந்த நிலையில், கடந்த ஒன்றரை வருடங்களாக வடக்கு,கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தமிழ் பிரதிநிதிகளுடன் பேசுகின்றேன், அரசியலமைப்பை திருத்தி 13ஐ அமுலாக்கப்போகின்றேன் என்ற அறிவிப்புக்கள் எல்லாமே வெறுமனே தனது அரசியல் அங்கீகாரத்துக்கான நடவடிக்கை என்பதை இப்போதாவது பேச்சுவார்த்தைக்குச் சென்றவர்கள் புரிந்து கொள்வார்களா?

அதுமட்டுமன்றி, எந்தவொரு பேச்சுவார்த்தைகளையும் குழப்பியவர்களாக தமிழ் தரப்பு இருக்கக் கூடாது என்பதற்காக தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைக்கு செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ள சம்பந்தன், இனியாவது, தென்னிலங்கை தலைவர்களின் உண்மை முகத்தினை உணர்ந்து கொள்வாரா? அவர் தள்ளாத வயதில் சென்று பேச்சு மேசையில் அமர்ந்திருந்தபோதும், எதிரே பேச்சவார்த்தை நடத்துபவருக்கு அதிகாரமே இல்லை என்ற நிலையில் இனி பேச்சுக்குச் செல்வதால் நடக்கப்போது ஒன்றுமில்லை என்பது கசப்பானதாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில், அடுத்து ஜனாதிபதி தேர்தலொன்றுக்கான முனைப்புக்கள் செய்யப்படுகின்றன. இதில் தமிழ் மக்கள் உட்பட சிறுபான்மை தரப்பின் வகிபாகம் காத்திரமானது என்பதை ஜனாதிபதி கனவில் உள்ள ரணில் விக்கிரமசிங்கவும் உணராதவர் அல்லர்.

ஆகவே, மீண்டும் மீண்டும் ரணில் நகர்த்தும் அரசியல் சுயநல சித்து விளையாட்டுக்குள் சிக்கிக்கொள்ளாது, அதிகாரப்பகிர்வுக்கான மக்கள் ஆணை பெறும் தரப்பினர் ஆட்சிப்பீடத்தில் அமரும் வரையில் அமைதியாக இருப்பதே தேவலை.

அவ்வாறில்லாது பேச்சுவார்த்தை என்ற போர்வையில் அழைக்கும் போதெல்லாம் பிரசன்னமாவது, ரணில் உட்பட எந்தவொரு தென்னிலங்கை ஆட்சியாளருக்கும் அதிகாரப்பீடத்தில் அமர்வதற்கான முண்டு கொடுப்பாகவே அமையும்.

அதுமட்டுமல்லாது, அவ்விதமான செயற்பாடாது, ஒட்டுமொத்த தமிழினத்தின் அபிலாஷைகளையும் தென்னிலங்கையின் நலன்களுக்குள் கரைத்து விட்டு கையறு நிலையில் நிற்பதற்கும் வழிசமைத்துவிடும் என்பதை எச்சரிக்கையுடன் குறிப்பிடுகின்றோம்.

# தேசத்தின் குரல்



"பாலண்ணையை நான் ஆழமாக நேசித்தேன். விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் ஒரு மூத்த தலைமகனாக பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்று சேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன். மோசமாகச் சுகவீனமுற்று தினம்தினம் சாவோடு போராடிய போதும் தாங்க முடியாத உடல் உபாதைகளால் வருந்திய போதும் தளர்ந்து போகாத உறுதிப்பாடு அவரிடம் இருந்தது. அவரின் இந்த இலட்சிய உறுதி எனது நெஞ்சத்தை தொட்டு நின்றது. அவர் துன்பத்தால் துவண்டபோதெல்லாம் எனது ஆன்மாவும் கலங்கியழுதது. " தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்

தமிழீழ தேசிய விடுதலைப்போராட்டத்தின் ஆயுத வடிவம் இலங்கையின் எல்லைக்குள் இடம்பெற்ற போதிலும் இதன் அதிர்வுகள் சர்வதேச அளவில் பெரும் கவனத்திற்கு உட்பட்டிருந்தன. அப்போராட்டத்தின் வெற்றி தோல்விகளை மேற்குலக நாடுகள் ஒரு புறமும் இந்தியா இன்னொரு புறமும் தமக்கு சாதகமாகக் கையாள முழு மூச்சுடன் ஈடுபட்டன. இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் காரணமாக இலங்கை அரசு தங்களில் தங்கிநிற்குமளவிற்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்கும் வகையில் எமது போராட்டத்தை மட்டுப்படுத்தவே அவை எந்நாளும் முயன்று வந்தன. அதன் காரணமாக வெளிப்படையில் எமக்கு ஆதரவு போலவும் அடிப்படையில் எமது போராட்டத்தை ஒரு கட்டத்திற்குள் வைத்திருக்கும் வகையில் தமது நகர்வுகளை மேற்கொண்டன.

இந்திய உளவு நிறுவனம் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தை நீர்த்துப் போக வைக்க சகல சூழ்ச்சிகளையும் மேற்கொண்டது. அது கைகூடாது போக நேரடியாகவே படைகளை இறக்கி விடுதலைப் புலிகளையும் அதன் தலைவர்களையும் அழித்துவிட முயன்றது.

இப்படியான பல நெருக்கடிகள் நிறைந்த பயணத்தில் விடுதலைப்போராட்டத்தை தடம் பிறளாது கொண்டு செல்ல ஒரு காத்திரமான அணுகுமறை தேவைப்பட்டது. அதாவது நாம் சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தப்பட்டாமலும் அதேவேளையில் சர்வதேச சதிக்குள் சிக்கிவிடாமலும் நாம் எமது போராட்டத்தை முன்னெடுக்கவேண்டியிருந்தது. இங்கு தான் எமது தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் ஒப்பற்ற ஒரு இராஜதந்திரியாக உயர்ந்து நின்றார்.

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் 17 ஆண்டு நினைவேந்தலில் நமது ஈழநாட்டின் அஞ்சலிகள்

## மறைந்த காட்டூனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து





# வடக்கில் கொட்டித்தீர்த்த கனமழை

**"முழுதாய் முடங்கிய முல்லைத்தீவு: காலநிலை மாற்றம் பற்றி அவதானம் அதிகரிகிறது"**



**சரண்**

வடக்கில் கடந்தவாரம் முழுவதும் கனமழை ஒருபிடிபிடித்து விட்டிருந்தது. தற்போதும் அது முழுதாய் ஓய்ந்தது என்று கூறுவதற்கு இல்லை. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டது.

குறிப்பாக, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரில் பகுதியளவில் பொதுமக்களின் நிலைமைகள் இடைத்தங்கல் முகாமுக்குச் செல்ல வேண்டிய நெருக்கடியான சூழல் ஏற்பட்டது.

இந்த மழை ஏற்படுவதற்கான காரணத்தினை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா விபரிக்கையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு கிடைத்து வருகின்ற கனமழைக்கான பிரதான காரணம், வங்காள விரிகுடாவில் தோன்றியுள்ள காற்று சுழற்சியானது மேற்கு நோக்கி, இலங்கைக்கு கீழாக நகர்ந்து அரபிக்கடலை சென்றடைகின்றமையாகும் என்று குறிப்பிடுகின்றார்.

அத்துடன், இந்த கனமழை காரணமாக, வடக்கு மாகாணத்தில் உள்ள நீர்ப்பரப்பு நீர்நிலைகள் அவற்றினுடைய உவர்நீரை பல்வேற்றுவதன் காரணமாகவும் பல்வேறு பகுதிகள் வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளும், கிளிநொச்சியின் கிழக்குப் பகுதியும், வவுனியா மாவட்டத்தினுடைய வடக்கு பகுதியும் , மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு, நானாட்டான், முசலி போன்ற பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலும் கிடைக்கின்ற கனமழை மற்றும் மேலதிக மேற்பரப்பு நீர் காரணமாகவும் வெள்ள அனர்த்தங்கள் ஏற்பட்டு வருகின்றன.

தொடர்ச்சியாக வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற 54 நடுத்தர மற்றும் மிகப்பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் அவற்றினுடைய உவர் நீரை வெளியேற்றுவதற்றுவதன் காரணமாகவும், தொடர்ச்சியாக 100 மில்லிமீற்றருக்கு மேற்பட்ட மழைவீழ்ச்சி பல பிரதேசங்களில் பதிவாகி இருப்பதன் காரணமாகவும் வடக்கு மாகாணத்தினுடைய பல பகுதிகளிலும் வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

அதுமட்டுமன்றி, வடக்கு மாகாணத்தினுடைய தாழ்நிலப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள், ஆற்றங்கரை ஓரம், குளங்கள் மற்றும் வான் பாய்கின்ற பகுதிகளுக்கு அண்மித்திருக்கின்ற மக்கள் நெருக்களைச் சந்தித்த அதேசமயம், இடம்பெயருமளவிற்கும் நிலைமைகள் தோன்றியதாகவும் குளங்கள் தொடர்ச்சியாக வான்பாய்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமைகளால் கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடு குளத்துக்கான நீர்வரத்து அதிகரித்தமையால் 14வான்கதவுகளும் திறந்து விடப்பட்டன. இதனால் விவசாய நிலங்கள் முற்றாக அழிவடையும் நிலைமையொன்று ஏற்கபட்டுள்ளது.

அத்துடன் இம்மாவட்டத்தில் அடைமழை காரணமாக இதுவரை 1299 குடும்பங்களைச் சேர்ந்த 4096 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு அவர்கள் 3 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

குறிப்பாக, கரைச்சி கண்டாவளை பகுதிகளிலேயே வெள்ளப்பாதிப்புக்கள் அதிகமாக உள்ளதோடு பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களின் அளவுகள் இதுவரையில் கணக்கில் எடுக்கப்படவில்லை என்பதும் முக்கியமானதாகின்றது.

இவ்வாறான நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலைமைகள் இம்முறை மிக மோசமாக இருந்தன. கடும் மழை காரணமாக அங்குள்ள அனைத்துக்குளங்களும் வான்பாய்வதன் காரணமாக பல பகுதிகள் நீரில் மூழ்க்கியுள்ளன. குறிப்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பண்டாரவன்னியன் மற்றும் புளியங்குளம் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அத்துடன் முத்தையன்கட்டு குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. தண்ணிமுறிப்புக் குளத்தின் வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இதனால் வெள்ள நீர் அதிகமாக வெளியேறி வருகின்ற நிலைமைகள் மோசமாக காணப்படுகின்றன.

அதேநேரம் முல்லைத்தீவில் 56 கிராமசேவகர்கள் பிரிவுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதோடு 976 குடும்பங்களைச் சேர்ந்த 3010பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இவர்களில் மூன்று இடைத்தங்கல் முகாம்களில் 68குடும்பங்களைச் சேர்ந்த 210பேர் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

மன்னார் மாவட்;டத்தின் தேவன் பிட்டி கிராமத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை அடுத்து அங்குள்ள மக்கள் இரண்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அத்தோடு மன்னாரின் சவுத்பார், சாந்திபுரம், ஜீவா நகர், ஜிம்ரான் நகர், எமில் நகர், பனங்காட்டுக்கொட்டு, பள்ளிமுனை, நூறுவீட்டுத்திட்டம் போன்ற பிரதேசங்களிலேயே வெள்ளநிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேநேரம், மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக, கிரான் மற்றும் புலிப்பாய்ந்த கல் ஆகிய பகுதிகளுக்கான தரைவழிப்பாதை முற்றாக செயலிழந்துள்ளது. இதனையடுத்து இயந்திரப் படகுச் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டள்ளது.

மேலும், உறுகாமம், மியன்கல்குளம், இலாவாணை, மற்றும் மாதுறு ஓயா வடிச்சல் ஊடாக வெளியேறும் நீர் காரணமாக தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அத்தோடு, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறுபிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 1334குடும்பங்களும் 4242தனிநபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலைமைகள் காணப்படுகிகையில், இலங்கைக்கு கிழக்காக எதிர்வரும் 19, 20, 22 ஆம் திகதிகளில் மீண்டும் ஒரு காற்று சுழற்சி உருவாகியதன் காரணமாக இலங்கையினுடைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மீளவும் ஒரு கனமழையை எதிர்நோக்கின.

இவ்வாறான நிலையில், இம்மாதம் எதிர்வரும் 29 ஆம் திகதியும், 2024ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் திகதியும் மீளவும் காட்டு சுழற்சிகள் தோன்றுவதற்கான வெப்பநிலை சாதகங்கள் வங்காள விரிகுடாவில் காணப்படுவதன் காரணமாக வடக்கு மாகாணம் அடுத்த ஆண்டு நடுப்பகுதி வரை தொடர்ச்சியாக கன மழையை எதிர்கொள்வதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருக்கின்றது.

ஏலவே இடைத்தங்கல் முகாம்களில் மக்கள் தங்கவைக்கப்படும் நிலைமைகள் தோன்றியுள்ள நிலையில் அடுத்து வரும் காலத்திலும் தொடர்ச்சியான மழைவீழ்ச்சி ஏற்படுமாயின் மேலும் பல அனர்த்தங்களுக்க வடக்கு, மாகாணம் முகங்கொடுக்க வேண்டிய நிலைமையே உருவாகவுள்ளது.

வடக்கு,கிழக்கில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதொன்றும் புதிய விடயமல்ல. 2000ஆம் ஆண்டுக்குப்பின்னரான காலத்தில் 2012, 2015, 2018 உள்ளிட்ட ஆண்டுகளில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் அதன் பின்னர் மிகக் கடுமையான வெப்பத்தாலும் இப்பிரதேசம் பாதிக்கப்பட்டது. வறட்சியால் நெருக்கடிகளும் ஏற்பட்டன.

இந்த நிலைமைகள் ஏற்படுவதற்கு காலநிலை மாற்றமே அடிப்படைக்காரணமாக அமைகின்றது. ஆகவே காலநிலைமை மாற்றம் சம்பந்தமான உரிய அவதானத்தடன் அதனை கையாள்வதற்கான கொள்கைகள் வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணத்தில் உடனடியாக வகுக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

விசேடமாக, வடக்கு,கிழக்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் சுயாதீன சூழலியலாளர்கள் இந்த விடயத்தில் ஒருங்கிணைந்த செயற்பாடுகளை தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகின்றது. இல்லாது விட்டால் சொற்ப கால இடைவெளிக்குள் கடுமையான மழை, கடுமையான வறட்சி ஆகியவற்றால் தொடர்ச்சியாக சவாலான நாட்களையே கடக்க வேண்டிய நிலைமைகள் ஏற்படும்.

அதேநேரம், அனர்த்த முகாமை தொடர்பில் படையினரின் ஒத்துழைப்புக்களுக்கு அப்பால், முறையான நிர்வாகச் செயற்பாடுகள் அவசியமாகின்றன. குறிப்பாக, குளங்கள் வான்பாய்வதற்கு அண்மிக்கின்றபோது, அந்நீரை பாதுகாப்பாக கடலுடன் இணைப்பதற்கான உரிய வழிகள் முறையாக பேணப்படவில்லை.

இதன்காரணமாகவே குளங்கள் உடைப்பெடுத்தவுடன் அவை கிராமங்களுக்கள் புகும் நிலைமைகள் தோன்றியுள்ளன. அதுமட்டுமன்றி, சில குளங்கள் உடைப்பெடுக்க முனைந்தபோது, அவற்றின் நீரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும் அந்நீர் மக்கள் செறிவான பகுதிக்குள் செல்வதை தடுப்பது பற்றி சிந்திக்கப்படவில்லை.

ஆகவே இவ்விதமான நிலைமைகளை முறையாக கையாள்வது அவசியமாகின்றது. அதேநேரம், விவசாயிகளும் மரபுரீதியான பெரும்போகம், சிறுபோக விவசாய நடவடிக்கைகளை தவிர்த்து காலநிழலை மாற்றத்தின் அவதானத்தின் அடிப்படையில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

இவையெல்லாவற்றுக்கும், வடக்கு,கிழக்கில் முறையான காலநிலை அவதானிகளும், செயற்பாட்டாளர்களும் அவசியமாகின்றனர். அவர்களின் எதிர்காலத்திட்டங்கள் அவசியமாகின்றன. இந்தச் செயற்பாட்;டிலாவது, அரசியல், மத,குல பேதங்களை தாண்டி கைகோர்ப்பது அவசியமாகின்றது. இல்லாது விட்டால் சொற்பகாலத்தில் குடிநீர்தேடும, உணவு தேடும் இனக்குழுமமாக வடக்கு,கிழக்கு மக்கள் மறும் நிலை ஏற்படாதிருக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதங்களும் இல்லை.

# இமயமலை பிரகடனம் வெற்றுக் கோது



**தந்திரீகன்**

டிசம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் சிறிலங்காவுக்கு விஜயம் செய்திருந்த உலகத் தமிழர் பேரவை மற்றும் கனடிய தமிழ் காங்கிரஸ் கூட்டணியினர், அனைத்துப் பீடங்களின் தேரர்களின் அங்கத்துவத்தைக் கொண்ட சிறந்த சிறிலங்காவுக்கான சங்க மன்றத்துடன் கைகோர்த்தவாறு, பல்வேறு சந்திப்புக்களை நடத்தியிருந்தார் கள்.

இந்தச் சந்திப்புக்களில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பௌத்த பீடங்கள், அனைத்துக்கட்சிகளின் பிரதிநிதித்துவங்களைக் கொண்ட பாராளுமன்ற குழுவினர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சந்திப்புக்களும் கலந்துரையாடல்களும் முக்கிமாவையாகின்றன.

இந்தச் சந்திப்புக்கள் உட்பட அனைத்து விதமான சந்திப்புக்களின் போதும் ‘இமயமலைப்பிரகடனம்’ கையளிக்கப்பட்டு அதன் ஊடாக தேசிய கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்கான நகர்வுகளுக்கான சாதகமான சமிக்ஞை பெறப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட தரப்பினர் மார்பு தட்டிக்கொள்கின்றனர்.

அதேநேரம், அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், வட அமெரிக்காவின் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு, இலங்கை தமிழ் சங்கம் அமெரிக்கா, யுனைற்றெட் ஸ்ரேற்ஸ் தமிழ் அக்ஷன் குறுப், உலக தமிழ் அமைப்பு அமெரிக்கா ஆகிய ஆறு அமைப்புகள் கூட்டாக எதிர்ப்பினை வெளியிட்டுள்ளன. இந்த அமைப்புக்களுக்கு அப்பால், 16 புலம்பெயர் அமைப்புக்களின் கூட்டான அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை உள்ளிட்ட பல தரப்பினரும் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

அதேநேரம், சிறிலங்காவில் தாயகத்தில் செயற்பட்டு வருகின்ற கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, ரெலோ,புளொட்,ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியவற்றின் கூட்டான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியனவும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளன.

அதுமட்டுமன்றி, தமிழரசுக்கட்சியில் சம்பந்தன், சுமந்திரன், சாணக்கியன் தவிர்ந்த ஏனையவர்கள் கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளதோடு, குறித்த முயற்சி சம்பந்தமாக அதிருப்தியான நிலையிலேயே உள்ளனர். தேரர்கள் ஊடாக தமிழர்கள் பிரச்சினைகளை கையாள முனைவது சிறப்பான விடயம் தான் என்று கருதினாலும் கூட மேற்கண்டவாறு பலத்த எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ள நிலையில் பிரகடனத்தின் உள்ளடகத்தில் என்னதான் உள்ளது என்று பார்ப்பது மிகவும் அவசியமாகின்றது.

**அந்த வகையில் இமயமலைப்பிரகடனத்தில்,**

• தங்களுடைய அடையாளம்; மற்றும் பெருமையை இழந்துவிடுவோமா என்ற பயம் எந்த ஒரு சமூகத்திற்கும் ஏற்படாத வகையில் நாட்டின் பல்வகைமைத்தன்மையைப் பேணிப் பாதுகாத்தலும், ஊக்குவித்தலும்

• பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ளல், உள்நாட்டு உற்பத்தியையும், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் மற்றும் ஏனையோரின் முதலீடுகளையும், பங்களிப்பையும் ஊக்குவிக்கக்கூடிய, இலங்கை ஒரு நடுத்தர வருமானம் பெறும் நாடாக வெற்றிப் பாதையில் செல்வதனை உறுதிப்படுத்தக்கூடிய பொருத்தமான அபிவிருத்தி மாதிரிகளைத் தெரிவு செய்தல்

• மாகாண மட்டத்தில் போதுமானளவு அதிகாரப்பகிர்வினை உறுதிப்படுத்தியும், தனிநபர் மற்றும் கூட்டு உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கக்கூடிய, சமத்துவம் மற்றும் அனைத்து மக்களுக்கும் சமமான குடியுரிமையை முன்னிலைப்படுத்தியதும் அதற்கான பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களை உள்ளடக்கியதுமான ஒரு அரசியலமைப்பை உருவாக்குதல், அதுவரை நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்பில்; உள்ளவாறான அதிகாரப்பகிர்வினைக் கண்ணியத்துடன்; நடைமுறைப்படுத்தல்.

• ஒன்றுபட்ட பிளவுபடாத நாட்டினுள் அதிகாரத்தைப் பகிர்தலும், மத, கலாசார மற்றும் ஏனைய அடையாளங்களை ஏற்று அத்தகைய அடையாளங்களுக்கு மதிப்பளிப்பதோடு இனங்களுக்கிடைலான மற்றும் மதங்களுக்கிடையிலான நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உழைத்தல்.

• கடந்த கசப்பான காலங்களில் இருந்து கற்றுக்கொள்ள உறுதிகொண்டு, மீண்டும் இவ்வாறான துயரங்கள் ஒருபோதும் ஏற்படாதிருக்கப்; பொறுப்புக்கூறல் உள்ளடங்கலாக, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஒப்புரவு அடைந்த ஓர் இலங்கைக்கான தூர நோக்கு.

• இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகளுக்கும் இதர சர்வதேசக் கடப்பாடுகளுக்கும் மதிப்பளித்து, சுயாதீனமான மற்றும் ஆற்றல் வாய்ந்த வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதனூடாக இலங்கையானது ஜனநாயகத்துடன் கூடிய சமாதானமான, வளமான உலக நாடுகள் மத்தியில் தனது பெருமையை நிலைநாட்டுதல்.

ஆகிய விடயங்களே உள்ளடகத்தில் காணப்படுகின்றன.

மேற்குறித்த விடயங்கள் எவையுமே ஏழு தாசப்தங்களாக விடுதலைக்காக போராடிவருகின்ற தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை என்பது மிகப்பிரதான விடயமாக உள்ளது.

வெறுமனே, பிரிக்கமுடியாத, பிளவபடாத நாட்டில் நியாயமான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற விடயம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளபோதும், தமிழர்களின் எதிர்பார்ப்புக்கள் எவற்றையும் உள்ளடக்கத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதே யதார்த்தமானதாகும்.

குறிப்பாக, அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் என்ற விடயம் கூறப்பட்டுள்ளது. அவ்வாறாயின் அது 13ஆவது திருத்தச்சட்டத்தினையே ஆகும்.

13ஆவது திருத்தச்சட்டமானது 1987ஆம் ஆண்டு இந்திய, சிறிலங்கா ஒப்பந்தத்தின் போது கொண்டுவரப்பட்டு தற்போது 36வருடங்களாகின்றபோதும் இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை என்பது மிகவும் முக்கியமானதாகின்றது.

அதுமட்டுமன்றி, ஏறக்குறைய 34உயர் நீதிமன்றத்;தீர்ப்புக்கள் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிரான வெளிப்பாடுகளைச் செய்துள்ள நிலையில் குறித்த சட் டத்துக்கான எஞ்சிய அதிகாரம் என்பது வெறுமனே அற்பசொற்பமானதாகவே இருக்கும்.

அதுமட்டுமன்றி, 13ஆவது திருத்தச்சட்டத்தினையோ அல்லது அதன் கீழான அதிகாரப்பகிர்வினையோ் தமிழ் மக்கள் ஒரு போதும் அங்கீகரிக்கவில்லை என்பதோடு ஏற்றுக்கொள்ளவுமில்லை.

தாயகத் தமிழர்களைப் பொறுத்தவரையில், ஐக்கிய சிறிலங்காவுக்குள், இணைந்த வடக்கு,கிழக்கில், தங்களைத் தாங்களே ஆட்சி செய்யவல்லவாறு அதிகாரங்கள் மீளப்பெற முடியாத வகையில் பகிரப்பட்டு, சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டி முறைமையிலான ஆட்சியொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே நிலைப்பாடாக உள்ளது. இதற்காகவே கடந்த 14ஆண்டுக்களாக தமிழ் மக்கள் தமது ஆணையை வழங்கியுள்ளனர்.

அவ்வாறு இருக்கத்தக்கதாக, தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யாத பிரகடனத்துக்கு பௌத்த பீடங்கள் ஆசீர்வாதம் வழங்கினால் என்ன, வழங்காது விட்டால் என்ன என்ற மனோநிலை தான் அதிகமாக உள்ளது.

அடுத்தபடியாக, பொறுப்புக்கூறல் விடயம் பற்றி குறித்த பிரகடனம் கிஞ்சித்தும் மௌனம் கலைக்கவில்லை. பாதிக்கப்பட்ட தாயக தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு எத்தனை பெருந்தொகை பணம் வழங்கினாலும், தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளவே விரும்புகின்றார்கள்.

இமயமலைப் பிரகடனம் செய்யப்பட்டபோது அதில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் எவருமே பங்கேற்றிருக்கவில்லை. குறிப்பாக, வலிந்து காணாமலாக்கப்பட்ட தரப்பில் எவருமே இந்த விடயத்தில் அக்கறை கரிசனை கொள்ளவில்லை. அவ்வாறிருக்கையில், தமது சொந்தங்கள் பற்றிக் கூறுங்கள், இல்லையென்றால் சிறிலங்கா அரசாங்கத்தினை பொறுப்புக்கூறச் செய்வதற்காக விசேட தீர்ப்பாயம் ஒன்றிற்கு பாரப்படுத்தல், அதேபோன்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தல் ஆகிய இருதெரிவுகளையே முன்மொழிவுகளாக வைத்துள்ளனர்.

சிறிலங்கா அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில், மேற்படி இரண்டு வினாக்களுக்கும் விடைகளை அறிந்து கொள்ள முடியாத நிலைமையில் தான் உள்ளது. காரணம், சிறிலங்கா அரசாங்கம் சிங்கள,பௌத்த தேசிய வாதத்தின் மேல் கட்டியமைக்கப்பட்டதாகும்.

ஆகவே, சிங்கள,பௌத்த தேசிய வாதம் தான் தேர்தலில் வாக்குகள் கிடைப்பதற்கான ஆயுதமாக உள்ளது என்பதும் முக்கியமான விடயமாகும். அந்த வகையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொறுப்புக்கூறல் என்பது காணல் நீராகவே இருக்கப்போகின்றது என்பது மிகத் தெளிவாக உள்ளது.

இதனைவிடவும், மிக முக்கியமாக இமயமலைப்பிரகடனம் செய்வதற்கு முன்னதாகவே அல்லது பின்னதாகவோ புலம்பெயர் தேசத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற எந்தவொரு தரப்பினருடனும் கலந்துரையாடவில்லை. அதுமட்டுமன்றி, சிங்காவில் உள்ள தமிழர் தாயகத்தில் கருத்துக்கள் கேட்டறியப்படவில்லை. ஆகக்குறைந்தது அந்த மக்கள் வாக்களித்த மக்கள் பிரதிநிதிகளுக்கு கூட முறையாக தெரியப்படுத்தப்படவில்லை.

இந்த நிலைமைகள் அனைத்தினையும் பார்க்கின்றபோது, குறித்த பிரகடமானது, தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாத, பொறுப்புக்கூறலை வலியுறுத்தாதவொன்றாகவே உள்ளது.

இவ்விதமான பிரகடனத்தினால் தமிழ் மக்களுக்கு கிடைக்கப்போது என்வென்று பார்க்கையில் எதுவுமே இல்லை என்பது தான் சாரம்சமாக உள்ளது. அவ்விதமான உள்ளடக்கத்தைக் கொண்ட ஆவணத்துக்கு தேரர்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த சிங்கள தேசமும் ஆதரவளித்தாலும் அதனால் தமிழ் மக்களுக்கு கிடைக்கப்போகின்ற நன்மைகள் எதுவுமில்லை.

அந்த வகையில் பார்க்கின்றபோது, இமயமலைப் பிரகடனம் என்பது தமிழர்களுக்கு எதனையும் வழங்காதவொரு வெற்றுக்கோது என்பது உறுதியானது.

இவ்வாறான வெற்றுக்கோதை இமயமலையில் இருந்து தென்னிலங்கைக்கு தூக்கிச் சுமப்பதொன்றும் பெரிய விடயமல்ல. ஆனால் அதனால் தமிழ் மக்களுக்கு உண்மையான விடுலை கிடைக்குமா என்றால் இல்லையென்றே விடை கிடைக்கப்போகின்றது.

ஆனால் இந்த பிரகடனத்தைப் பயன்படுத்தி உலகத்தமிழர் பேரவையும், அதனுடன் இணைந்த தரப்பினரும் வேண்டுமானால் நன்மைகளை அந்து கொள்ளலாமே தவிரவும், தாயகத்தமிழர்கள் தொடர்ந்தும் போராடிக்கொண்டிருக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

தமிழர்கள் அபிமானமிழந்து, அபிலாஷைகளைத் துறந்து, மறப்போம் மன்னிப்போம் என்ற பெருந்தகையாக பயணிப்பதற்கு தற்போதைய சூழலில் தயாரற்றவர்களாக உள்ளனர்.

ஆகவே அவ்விதமான விடயங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக இமயமலைப்பிரகடனம் பரந்துபட்ட கலந்துரையாடலின் அடிப்படையில் மீள வரையப்பட்டு அது பௌத்த பீடங்களால் ஏற்கப்படுமாயின் அதுவே உலகத்தமிழர் பேரவை மற்றும் கனடிய தமிழ் காங்கிரஸின் கூட்டு முயற்சியின் முதலங்கமாக இருக்க முடியும்.

# ஸ்ரீலங்காவும் ஐ.நாவும் மனித உரிமைகளை மதிக்கவில்லையே?

## தமிழ் தேசிய ஆய்வு அமையம் ஆதங்கம்




ஸ்ரீலங்கா அரசு மாத்திரமின்றி, ஐக்கிய நாடுகள் சபை அமைப்பும் மனித உரிமைகளை மதிக்காமல்தான் நடக்கின்றன என்று சுட்டிக்காட்டியுள்ள தமிழ் தேசிய ஆய்வு அமையம், ஸ்ரீலங்கா மனித உரிமைகளை குழி தோண்டிப் புதைப்பதற்கு முழு தைரியத்தை ஐ.நா மன்றமே வழங்குகின்றது என்றும் தனது ஆதங்கத்தை தெரிவித்துள்ளது. உலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது குறித்து அமையம் மேலும் தெரிவித்ததாவது:

உலக மனித உரிமைகள் தினம்

“டிசம்பர் 10 உலக மனித உரிமைகள் தினமாகும். ஐக்கிய நாடுகள் அவை 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் உலக மனித உரிமைப் பேரறிக்கை என உலக மக்கள் அனைவருக்குமான வாழ்வுரிமைகளை பிரகடனப்படுத்தியது. அந்த நாளைக் குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் டிசம்பர் 10 ஆம் தேதி உலக நாடுகள் அனைத்தாலும் ”மனித உரிமை நாள்” கொண்டாடப்படுகிறது. 1948 டிசம்பர் 10ஆம் நாள் ஒன்றுக்கூடிய ஐக்கிய நாடுகளின் பொது அவையால் அனைத்துலக மனித உரிமைகள் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை பெருமைப்படுத்தும் பொருட்டு இந்நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. ஐ.நா.வின் பொது அவை நாடுகளுக்கும் தன்னார்வ நிறுவனங்களுக்கும் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க 1950 முதல், டிசம்பர் 10 ஆம் நாள் முதல் மனித உரிமைகள் நாளாக உலக மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகள் அவையின் நிகழ்வுகளில் முதன்மையான இந்நாளில், நியூயார்கில் அமைந்துள்ள அதன் தலைமைப்பீடத்தில் முக்கிய நிகழ்வுகள் இடம்பெறுவது வழக்கமாகும். இந்நாளில் ஐந்தாண்டுக்கு ஒரு முறை வழங்கப்படும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் பரிசு வழங்கப்படும். மேலும் பல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்நாளில் பல முக்கிய நிகழ்வுகளை நடத்துவது வழக்கமாகும். இதேவேளை இலங்கையிலும் பிற நாடுகளிலும் உலக மனித உரிமைகள் தினம் அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்த நாளின் போது மனித உரிமைகள் குறித்த கவனயீர்ப்பு போராட்டங்கள் இடம்பெறுவதுடன், மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்குகளும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மனித உரிமைகள் என்றால் என்ன?

மனிதர்களும் எல்லோரும் சுதந்திரமானவர்கள் என்பதையும் உரிமையிலும் கண்ணியத்திலும் ஒருவருக்கு ஒருவர் சமமானவர்கள் என்பதையே ஐ.நாவின் மனித உரிமைப் பிரகடனம் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு மனிதனுக்குமான வாழ்தலை வலியுறுத்தும் மனித உரிமைப் பிரகடனம் இனம், மதம், நாடு, மொழி, பால், சாதி போன்ற ஏற்றத்தாழ்வுகளற்ற ரீதியில் மனிதர்கள் அவர்களுரிய சம உரிமையை உடையவர்கள் என்றும் குறிப்பிடுகிறது. என்ற போதும் கூட ஐக்கிய நாடுகள் சபையும் அதனில் அங்கம் வகிக்கின்ற நாடுகளும் சரி, நடைமுறையில் இந்த நாள் குறித்து எவ்வாறு நடந்து கொள்கின்றன என்பது குறித்து வெறுமையும் கேள்விகளும் நிறைந்துள்ளதை நாம் சுட்டிக்காட்டுகிறோம்.

ஒடுக்கப்படும் ஈழத் தமிழ் இனத்தின் உரிமைகளுக்கு வழங்கப்பட்ட நீதியைப் பற்றி இன்றைய நாளில் நாம் கரிசனை செலுத்த வேண்டியிருக்கிறது. மனிதர்களின் வெவ்வேறு விதமான உரிமைகளும் அடையாளங்களும் வலியுறுத்தப்படுகின்ற, அங்கீகரிக்கப்படுகின்ற காலத்தில் ஈழத் தமிழ் மக்களாகிய நாம் எம்முடைய நிலத்தில் வாழ முடியாது. நம்முடைய அடையாளங்களுடன் நாம் வாழ முடியாது. நாம் நாமாக வாழ முடியாது. நம்முடைய வரலாற்றைப் படிக்க முடியாது. நம்முடைய வரலாற்றை பேச முடியாது. இழந்த உரிமைகளைப் பற்றி பேசவும் அதனைக் கோரவும் முடியாது. உலகமயமாதல் சூழலில் உலகின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் அவதானிக்கின்ற, அல்லது தட்டிக் கேட்கக்கூடிய காலம் ஒன்றிலேயே நாம் பலவந்தமாக இனவழிப்புக்குள் அமிழ்த்தப்படும் நிலையில் மனித உரிமைப் பிரகடனங்களும் இனவழிப்புக் காவல் செய்யும் நிலையில் உண்மையில் மனித உரிமைகள் என்றால் என்ன? அதற்கான தினம் மதிக்கப்படுகிறன்றதா என்ற கேள்வி எழுகின்றது.

ஈழத்தில் மனித உரிமை மீறல்கள்

இலங்கைத் தீவில் ஈழத் தமிழ் மக்களின் மனித உரிமைகளை மதிக்காமல் அடக்குகின்ற செயற்பாடு கடந்த எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்கின்ற துன்பம் என்பதை உலகம் நன்கறியும். ஈழத்தில் தமிழ் மக்களின் மொழிமீது உரிமைகள் மறுக்கப்படுகின்றன. ஈழத்தில் தமிழ் மக்களின் பண்பாடுமீது உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இழந்த உரிமைகளை கேட்டு ஈழத் தமிழ் மக்கள் அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். என்றபோதும் சிங்களப் பேரினவாத அரசு ஈழத் தமிழ் மக்களை தொடர்ந்து இனவழிப்பு செய்வதிலேயே அக்கறை காட்டி வருகின்றது.





இந்த நிலையில் ஈழத்தில் பல்வேறு கால கட்டங்களில் இனப்படுகொலைகள் பாரிய அளவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 1958 இனப்படுகொலை தொடங்கி, 77 இனப்படுகொலை, 83 ஜூலை இனப்படுகொலை என்று ஈழத் தமிழ் மக்கள் மனித உரிமை மீறல்களுக்கு தொடர்ந்து முகம் கொடுத்த வண்ணமுள்ளனர். இதன் உச்சமாக 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் மிகப் பெரும் இனப்படுகொலை இந்த நூற்றாண்டின் மாபெரும் இனப்படுகொலையாக மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய இனப்படுகொலையை ஸ்ரீலங்கா புரிந்துவிட்டுத்தான் இன்று மனித உரிமைகள் குறித்து பேசிக் கொண்டிருக்கின்றது. இதுவே வேடிக்கையும் வேதனையும் தருகின்ற விடயமாகும்.

ஐ.நா ஏன் தடுக்கவில்லை?


ஈழத்தில் மாத்திரமல்ல, ருவாண்டா இனப்படுகொலை, குர்து இனப்படுகொலை, ஆர்மோனியன் இனப்படுகொலை என்று உலகில் நிகழ்ந்தேறிய எல்லா இனப்படுகொலைகளின் போதும் மனித உரிமை என்ற வார்த்தைகள் சாதாரணமாககூட உபயோகிக்கப்பட்டு, அவை தடுத்து நிறுத்தப்படவில்லை. அதனை மனித உரிமை மீறல்களாக ஏற்றுக்கொள்ளவும், இனப்படுகொலைகளாக ஏற்றுக்கொள்ளவும் வெகுகாலம் எடுத்தது. இந்த மக்களின் இனப்படுகொலைக் கல்லறைகள்மீது வெள்ளையும் அடிக்கப்பட்டது. உலகின் அரசியல் தேவைகளின் பிரகாரங்களின்படியே தீர்ப்புக்கள் காலம் தாழ்ந்து கிடைத்தன.

இந்த நிலையில் மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது ஐ.நாவின் பொறுப்பாகும். ஐ.நா என்ற அமைப்பே மனித உரிமைகள் பிரகடனத்தை மேற்கொண்டுள்ளதுடன், மனித உரிமைகள் பேரவை என்ற அமைப்பையும் கொண்டு நடாத்துகின்றது.

அத்துடன் உலக மனித உரிமைகள் தினத்தை பிரகடனப்படுத்தியுள்ள ஐ.நா உண்மையில் அதற்கு நேர்மையாக நடக்கின்றதா என்று பார்த்தால் ஏமாற்றமே எஞ்சுகிறது. இதன் காரணமாகவே ஸ்ரீலங்கா துணிந்தும் அச்சமின்றியும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது. இனியும் ஐ.நா இந்தப் போக்கை தொடர்ந்தால் எஞ்சிய ஈழத் தமிழ் இனமும் அழிக்கப்படும். எனவே, ஐ.நா அமைப்பு மனித உரிமைகளுக்கு உண்மையாக நடக்கும் பொருட்டு, ஸ்ரீலங்காமீது இனப்படுகொலை குறித்த பன்னாட்டு விசாரணையை ஆரம்பித்து நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்...” என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# தமிழரசின் எதிர்காலம்

## 'தலைமைக்கான மும்முனைப் போட்டி கட்சியின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துமா இல்லை கூறுகளாகப் பிளவுபடுத்துமா?'




தமிழரசன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாடு திட்டமிட்டபடி புத்தாண்டின் ஜனவரி 27இல் நடைபெறும் என்று உறுதியாகியிருக்கின்றது.

இந்த மாநாடு திருகோணமலையில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டின் ஏற்பாடுகளை திருகோணமலை மாவட்டக்குழு, விழா ஏற்பாட்டுக்குழுவாகவும் இருந்து செயற்படவுள்ளது.

அதேநேரம், எதிர்வரும் ஜனவரி 21ஆம் திகதி பொதுச்சபை கூடவுள்ளது. இந்தப் பொதுச்சபையில் தான் இலங்கைத் தமிரசுக் கட்சிக்கான புதிய தலைவர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைமைப்பதவிக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் போட்டியிடுகின்றார்.

அவருடன் முட்டிமோதுவதற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கச்சைகட்டிக்கொண்டு களத்தில் இறங்கியுள்ளார். இவர்களுக்கு மத்தியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் ஒழுக்காற்றுக்குழு தலைவருமான சீனித்தம்பி யோகேஸ்வரனும் போட்டிக்களத்தில் குதித்துள்ளார்.

இதில், சுமந்திரன் தலைமைப்பதவிக்கு களமிறங்கியமைக்கு காரணங்கள் உள்ளன. சுமந்திரன் 2020ஆம் ஆண்டு பெப்ரவரியில் அரசியலில் இருந்து விலகப்போவதாக சம்பந்தன் மற்றும் மாவையிடம் கூறியுள்ளார். சம்பந்தன் தேர்தல் அரசியலில் இருந்து விலகுவதாக தீர்மானித்திருந்த நிலையில் தான் சுமந்திரனும் அந்த முடிவுக்கு வந்திருந்தார்.

எனினும், சம்பந்தன் மற்றும் மாவையின் வலியுறுத்தல்கள், எதிர்காலத்தில் கட்சியை வழிநடத்தும் பணியை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் உள்ளிட்ட இன்னொரன்ன வாக்குறுதிகள் தான் அவரை தற்போது தலைமைக்கான போட்டிக்களத்திற்கு தள்ளிவிட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக, சுமந்திரனுக்கு வாக்குறுதிகளை அள்ளி வழங்கிவிட்டு பின்னரான காலத்தில் மாவை அவரை ஓரம்கட்டுவதற்கு முனைந்தமை தான் சுமந்திரனை முழுவீச்சில் தலைமையை நோக்கிய ஓட்டத்துக்குள் உந்தித்தள்ளியுள்ளது என்பது தான் மறுதலிக்க முடியாத உண்மையாகின்றது.

அதேநேரம், சிறீதரனைப் பொறுத்தவரையில் அவருக்கு கிளிநொச்சி மாவட்;டக்கிளைத் தலைவர் என்பதைத் தவிர வேறெந்த பதவி நிலைகளும் கடசிக்குள் இல்லை. மூன்று நாடாளுமன்றத் தேர்தல்களில் தொடர்ச்சியாக அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று கட்சியின் முதன்மை வெற்றியாளராக வந்திருக்கின்றபோதும் இதுவரையில் அதற்குப் பிரதியீடாக கட்சி அவருக்கு எதுவும் செய்யவில்லை.

அந்த வகையில் தான், தனக்குப் பின்னர் கட்சியில் இணைந்தவர்கள் செயலாளராக,தலைவராக முயற்சிக்கின்ற நிலையில் தான் ஏன் தலைமைக்கு தகுதியில்லை என்கின்ற நியாயமான ஆதங்கம் அவருக்கு உள்ளது. அதனடிப்படையில் தான் அவர் தலைமைப்பதவிக்கு போட்டியிடுகின்றார்.

இதேநேரம், யோகேஸ்வரன் போட்டிக்களத்தில் குதித்தமைக்கான காரணம் விநோதமானது. குறிப்பாக, மட்டக்களப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிரான அரசியலை முன்னெடுப்பவர் பிள்ளையான் என்று நன்கு அறியப்பட்ட சிவநேசத்துரை சந்திரகாந்தன். இவருடைய அணியினர், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைமைக்கு கிழக்கில் இருந்து யாரும் தகுதியில்லை என்ற விமர்சனத்தை முன்வைக்க ஆரம்பித்தனர்.

ஆகவே அவ்விதமான விமர்சனம் தமது எதிர்கால அரசியலுக்கு பாதகத்தை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதற்காகவே யோகேஸ்வரன் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார். அவரைப் பொறுத்தவரையில் வெற்றி தோல்வி என்பதற்கு அப்பால் கிழக்கிலும் தலைமைக்கு தகுதியானவர்கள் உள்ளனர். அங்கே தலைமைக்கான இயலாமை இல்லை என்பதை வெளிப்படுத்துவது தான் இலக்காக உள்ளது.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைமைக்கு மும்முனைப் போட்டி ஏற்பட்டுள்ள நிலையில் இதில் யார் வெற்றி பெறுவார்கள் என்ற எதிர்வு கூறல்கள் மெல்மெல்ல வெளிப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் பார்க்கின்றபோது, திருகோணமலையில் சுமந்திரனுக்கு நெருக்கமானவரான கனடா குகதாசன் தான் கட்சியின் மாவட்டக்கிளை தலைமையை வகிக்கின்றார். ஆகவே அவருடைய ஆதிக்கம் சுமந்திரனுக்கான ஆதரவுக்கே வழிவகுக்கும்.

அடுத்து அம்பாறையில், கலையரரசன் இருக்கின்றார். இவர் சிறீதரனுடன் நெருக்கமாகச் செயற்பாட்டாலும், தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள இவருடைய பதவிநிலையானது சுமந்திரனின் கையில் இருப்பதாகவே கூறப்படுகின்றது. அதுமட்டுமன்றி, பொருளாதார நெருக்கடிகளுக்கும் சுமந்திரன் கைகொடுக்க தயாராக இருப்பதாகவும் தகவல். இவ்வாறான பின்னணியில் அடுத்த தேர்தலையும் கருத்திற்கொண்டு அவரும் சுமந்திரன் பக்கம் சாயலாம்.

இதேநேரம், மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் சுமந்திரனின் சகாவாக இருக்கும் சாணக்கியன் மாவட்டக்கிளையின் தலைவராக உள்ளார். அவருக்கு ஆதரவான அணியொன்று உள்ளது. அதேநேரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து சிறிநேசன், அரியநேத்திரன் உள்ளிட்டவர்கள் சாணக்கியனின் நிலைப்பாடுகளுக்கு எதிரான மனோநிலையில் உள்ளார்கள்.

அவர்கள் சிறீதரனை ஆதரப்பதாக ஆரம்பத்தில் கூறியிருந்தார்கள். ஆனால் இப்போது யோகேஸ்வரன் போட்டியிடுவதன் காரணத்தினால் 'நாங்கள் கிழக்கார்' என்ற பிரதேசவாதம் கோலோச்சினால் சிறிநேசன், உட்பட மேலும் சில வாக்குகள் யோகேஸ்வரன், அரியநேத்திரன் உட்பட கிழக்கு வாக்குகள் சுமந்திரன், சிறீதரனை விட்டுச் செல்வதற்கான வாய்ப்புக்களே அதிகமுள்ளன.

இதேநேரம், வடக்கினை எடுத்துக்கொண்டால் சத்தியலிங்கம் தலைமையிலான வவுனியா மாவட்டக்கிளை, சிவமோகன், ரவிகரன் ஆகியோரின் ஆதிக்கத்தில் உள்ள முல்லைத்தீவு ஆகியன சுமந்திரனுடனேயே உள்ளன. ஆகவே இவ்விரு மாவட்டங்களும் பிளவுகளின்றி சுமந்திரனின் பக்கம் வாக்களிக்கும்.

மன்னார் மாவட்டத்தில் சிறீதரனுக்கு ஆதரவாக சாள்ஸ் நிர்மநாதன் உள்ள அதேநேரம், அங்கிருந்து எவ்விதமான பிரதிபலிப்பு கிடைக்கும் என்று கூறமுடியாத நிலைமையே உள்ளது. குறிப்பாக, மன்னார் மாவட்டத்தின் ஆதரவு அடுத்த நாடாளுமன்ற ஆசன ஒதுக்கீடு சார்ந்ததாகவே அமையவுள்ளது.

இதேநேரம், கிளிநொச்சி மாவட்டத்தினைப் பார்க்கையில், அதுமுழுமையாக சிறீதரனின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாக கூறினாலும், அங்கிருந்து சுமந்திரனுக்கான தலைமை வேட்பு மனுவில் கையொப்பங்கள் தயக்கமின்றி வழங்கப்பட்டுள்ளதால் சந்தேகமான நிலைமைகள் காணப்படுகின்றன. எனினும் மாவட்டத்தின் பெரும்பான்மை ஆதரவு சிறீதரனின் பக்கமே இருக்கின்றது என்பது யதார்த்தமானது.

அடுத்து யாழ்ப்பாண மாவட்டத்தைப் பார்க்கையில் அங்கும் குழப்பமான நிலைமைகள் தான் உள்ளன. வடமாராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணம் என்பன சுமந்திரனுடன் உள்ளமை தெளிவாக புலப்படுகின்றது. எனினும் ஏனைய வலிகாமம், தீவகம் உள்ளிட்ட பகுதிகள் யாருடன் இருக்கின்றன என்பதை வாக்கெடுப்பின் பின்னர் தான் உணராலம்.

இவ்வாறிருக்கையில், தலைமைக்கு போட்டியின்றி இணக்கப்பாட்டின் அடிப்படையில் தான் தெரிவுகள் இடம்பெற வேண்டும் இல்லையென்றால் கட்சி பிளவுபட்டு விடும் என்கின்ற விடயத்தினை மந்திரம்போன்று உச்சரித்தவாறு உள்ளார் தற்போதைய தலைவர் மாவை. அதுமட்டுமன்றி மும்முனை போட்டிகள் நிலவுவதால் தானே தொடர்ந்து பதவியில் இருக்க வேண்டுமென்று பலர் கூறுவதாகவும் அவர் கூறிவருகின்றார்.

எனினும், அவர் தொடர்ச்சியாக தலைமையில் நீடிப்பதற்கு கட்சியின் யாப்பில் எந்தவிதமான ஏற்பாடுகளும் இல்லை. அதேபோன்று, தலைமைக்காக போட்டியிடும் மூவலும் தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கு தயாராகவே உள்ளனர். அவர்கள் வேட்புமனுக்களை மீளப்பெறவுமில்லை.

இவ்வாறான நிலையில், கட்சியின் தற்போதைய பெருந்தலைவர் சம்பந்தன் திருகோணமலை மாவட்ட கிளைத்தெரிவில் தனது ஆதரவாளர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு கடிதமெனர்றை எழுதியுள்ளார். அந்த கடிதத்துக்கு அமைவாக ஒழுக்காற்று விசாரணை ஒன்றை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகவுள்ளது. எனினும் அதற்கான கால ஒதுக்கீட்டை இன்னமும் தற்காலிக பொதுச்செயலாளர் வழங்கவில்லை.

மறுபக்கத்தில், மாவையும் தனது காங்கேசன்துறை தொகுதியில் இடம்பெற்ற கிளை உறுப்பினர்கள் தெரிவிலும், யாழ்ப்பாணத்தொகுதியிலும் குழப்பங்கள் இருப்பதாக கூறுகின்றார். ஆனால் இதுவரையில் அதற்காக முறையான முறைப்பாட்டை அவர் செய்யவில்லை. இதேவேளை, கொழும்புக்கிளை தெரிவில் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக மூவர் கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

இந்த விடயங்கள் எல்லாம் எப்போது விசாரணைக்கு உட்படுத்தப்படும். அவை எப்போது நிறைவடையும் என்பது பற்றியெல்லாம் எந்தவிதமான தகவல்களும் இல்லை. ஒருவேளை இந்த விடயங்களை மையப்படுத்தி யாராவது நீதிமன்றம் சென்றால் கட்சியின் மாநாடு உட்பட அனைத்து செயற்பாடுகளுக்கும் என்ன நடக்கும் என்பதை எவருமே அறியவில்லை.

ஆக, தந்தை செல்வா அன்று கூறியதாக கூறப்படும் தமிழ் மக்களை இனி கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற கூற்றை மீள நினைவுபடுத்துவதோடு தமிழரசுக்கட்சியை கடவுள் தான் காப்பற்ற வேண்டும் என்று கூறுமளவிற்கு நிலைமைகள் உருவாகியுள்ளன.



# 1,700 சம்பள அதிகரிப்பு மீண்டும் ஒரு பொய்யான வாக்குறுதியா?

அரச ஊழியர்களின் சம்பளத்தை ஜனவரி முதல் 20,000 ரூபாயால், அரசாங்கம் அதிகரிக்க வேண்டுமென வலியுறுத்தி இலங்கையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1,700 ரூபாயாக அதிகரிப்பது குறித்த அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு, ஊடங்களையும் மக்களையும் கொஞ்சம் உசுப்பேற்றியிருந்தார் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறும், தோட்டத் தொழிலாளர்கள் கோரும் குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் ரூபாய் 1,700 வழங்குதல் அல்லது அதிகரிக்கப்படும் சம்பளம் குறித்து டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன் அறியத்தருமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தோட்ட நிறுவன பிரதானிகளுக்கு பணிப்புரை வழங்கியிருந்தார். பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதானிகளுடன் டிசம்பர் 8ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான ஜனாதிபதியின் சம்பள உயர்வு முன்மொழிவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வரவேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அத்துடன், தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்திற் கொண்டு அதற்கேற்ற வகையில் நியாயமான ஒரு சம்பள உயர்வை பெருந்தோட்ட கம்பனிகள் வழங்க வேண்டும் எனவும் ஜீவன் தொண்டமான் தெரிவித்திருந்தார்.

எதிர்வரும் டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் பெருந்தோட்ட நிறுவனங்கள் தமது நிலைப்பாட்டை தெரியப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி பணிப்பு விடுத்துள்ள நிலையில் நிறுவனங்களின் நிலைப்பாடு அறிவிக்கப்பட்ட பின்னர் தமது தரப்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்போது குறிப்பிட்டிருந்தார். "அரச பங்காளியாக இருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலையகம் தொடர்பிலும், மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் தொடர்பிலும் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் மகிழ்ச்சியளிக்கின்றது. எனவே, மலையகம் தொடர்பில் ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் நகர்வுகளுக்கு ஏனைய மலையக நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்கி சமூக மேம்பாட்டுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும்." எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் அறிவிப்பும், அமைச்சரின் வரவேற்பும் மகிழ்ச்சித்தரக்கூடிய விடயம்தான் என்றாலும் இது நடைமுறையில் சாத்தியப்படுமா? பெருந்தோட்ட நிறுவனகள் மூன்று வாரங்களுக்குள் இதற்கு சாதகமானதொரு முடிவை அறிவிக்குமா? என கேள்விகள் எழுந்த நிலையில், பெருந்தோட்ட நிறுவனங்கள் 1,700 ரூபாயை வழங்க 'முடியாது' என அறிவித்துள்ளதாக எம்.பி மனோ கணேசன் தெரிவித்திருந்தார். "தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிக்க கம்பனி இணக்கம் இல்லை என தெரிவித்திருக்கிறது. ஆனால் ஜனாதிபதி தெரிவித்தது போல் சம்பள நிர்ணய சபை, கூட்டு ஒப்பந்தம் அல்லது வேறு எந்த வழியிலாவது அதனை செய்ய வேண்டும் என தெரிவிக்கிறோம்." என மனோ கணேசன் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளப் பிரச்சினை என்பது இன்று நேற்று ஆரம்பமான ஒரு பிரச்சினையல்ல இரண்டு தசாப்தங்களைத் தாண்டிய வரலாறு இதற்கு உண்டு. பெருந்தோட்டங்களை நிர்வகிக்கும் நிறுவனங்களின் முதலாளிகளுக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் செய்துகொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கும் நடைமுறையே (கூட்டு ஒப்பந்தம்) கடந்த இரு தசாப்தங்களாக தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டு வருகிறது. 1998ஆம் ஆண்டு முதன்முறையாக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதோடு 2003ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்ட இந்த ஒப்பந்தம் இன்றும் நடைமுறையில் இருக்கின்றது. இந்த ஒப்பந்தத்தில் இருக்கும் சில குறைபாடுகளே இந்த ஒப்பந்தத்தை பலரும் இன்றும் நிராகரிப்பதற்கும் விமர்சிப்பதற்கும் காரணமாக அமைந்தது. இந்த நிலையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை தீர்மானிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த கூட்டு ஒப்பந்தம் 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரத்து செய்யப்பட்டு, சம்பள நிர்ணய சபையின் ஊடாக தொழிலாளர்களுக்கு 1,000 சம்பளத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டது. எனினும் சுமார் இரண்டரை வருடங்களாக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குறித்த ஆயிரம் ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்படாத நிலையில், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அவர்கள் பல்வேறு சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையில், தற்போது ஜனாதிபதி அறிவித்திருக்கும் இந்த சம்பள அதிகரிப்பிற்கும் இந்த ஒப்பந்தத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை ஆகவே, "தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்." என்ற அறிவிப்பை ஜனாதிபதி வெளியிட்டிருப்பதானது எந்த அடிப்படையில் என்ற கேள்வி எழுந்துள்ளது. "இது ஜனாதிபதியின் அடுத்தத் தேர்தலுக்கான ஒரு அறிவிப்பு அவ்வளவுதான். இது நடக்காது என எங்களுக்கும் தெரியும் அவருக்கும் தெரியும். ஆயிரம் ரூபாயை கேட்டு எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. எனினும் இன்னமும் வழங்கப்படவில்லை. இந்த ஆயிரத்து எழுநூறு அறிவிப்பானது பிச்சைக்காரனிடம் சுடு சோறு கேட்பதற்கு ஒப்பான கதை" என்கிறார் தலவாக்கலையைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளியான சுப்பையா.

பெருந்தோட்ட நிறுவனங்கள் ஏற்கனவே உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாக, குறிப்பாக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் இரசாயன உர இறக்குமதி தடை கொள்கையால் தேயிலையின் வளர்ச்சி குன்றியுள்ளதாகவும் இதனால் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளன.

எனினும் கடந்த காலங்களில் வருமானம் அகரித்த போது இவ்வாறு ஏதாவது அறிக்கைகளை நிறுவனங்கள் வெளியிட்டதா? என்ற கேள்வியை தொழிற்சங்கங்களும், தொழிலாளர்களும் முன்வைத்துள்ளனர்.

இதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை அதிகரிப்பதற்கு சூத்திரமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் கடந்த ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி தெரிவித்திருந்தார். குறிப்பாக நாட்டின் பொருளாதார நிலைமை, பணவீக்கம் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சூத்திரம் ஒன்றை உருவாக்கி தொழிலாளர்களுக்கான சம்பளத்தை வழங்க பெருந்தோட்ட நிறுவனங்கள் முன்வர வேண்டுமென அமைச்சர் வலியுறுத்தினார். எனினும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார, மீண்டும் கூட்டு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக கடந்த ஒக்டோபர் 25ஆம் திகதி தெரிவித்திருந்தார். ஆகவே இவ்வாறான முரண்பாடான கருத்துக்களை வெளியிடுவதை வைத்தே அமைச்சர்களான ஜீவனும், மனுஷவும் அவர்களுக்குள் கலந்துரையாடவில்லை என்ற விடயம் அம்பலமாகிறது.

நாட்டின் தற்போதைய நிலையில், வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ற வகையில் ஒரு கூட்டு ஒப்பந்த முறையைக் கொண்டு வந்தால், அதற்கு ஆதரவளிக்க தயாராக இருப்பதாக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார். இதற்கு அமைச்சர் ஜீவன் தொண்டமானும் ஆதரவளிப்பார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பல வருடங்கள் கூட்டு ஒப்பந்த முறையில் இணைந்து செயற்பட்டதாகவும் தற்போதைய சூழ்நிலையில் சிரமத்திற்கு மத்தியில் பெருந்தோட்ட நிறுவனங்களை கொண்டு நடத்துவதாகவும் பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளன ஊடகப்பேச்சாளர் ரொஷான் இராஜதுரை கூறியுள்ளார், ஆகவே சம்பள நிர்ணய சபையின் தற்போதைய முறைமை சிறந்தது என சுட்டிக்காட்டிய அவர், அதிலிருந்து வெளியேறுவதற்கு தீர்மானிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். எனினும் கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் சகல தரப்பினரையும் ஒன்றிணைத்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் பட்சத்தில், அது தொடர்பில் பரிசீலிக்க முடியும் எனவும் ரொஷான் இராஜதுரை மேலும் தெரிவித்திருந்தார்.

இந்த முரண்பாடுகள் நீடிக்கின்ற நிலையில், கூட்டு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் அறிவித்ததுபோல் 1,700 ரூபாய் சம்பளத்தை வழங்குவதற்கான தீர்மானத்திற்கு வருவது அவ்வளவு இலகுவான காரியமல்ல, எனினும் கூட்டு ஒப்பந்தத்தில் ஈடுபடும் தொழிற்சங்கங்கள் ஓரணியில் திரண்டு, பெருந்தோட்ட நிறுவனங்களுடன் ஆக்கப்பூர்வமான கலந்துரையாடலில் ஈடுபடுவதன் ஊடாக ஒரு தீர்மானத்திற்கு வரமுடியும். அந்தத் தீர்மானம் எதிர்வரும் புத்தாண்டில் தமக்கு மகிழ்ச்சித்தரக் கூடிய ஒன்றாக அமைய வேண்டுமென்பதே தொழிலாளர்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.









# தமிழ் தகவல் நடுவத்தின்
# மனித உரிமைகள் தின விழா 2023

சர்வதேச மனித உரிமைகள் தினத்தினை முன்னிட்டு தமிழ் தகவல் நடுவத்தின் (TIC) உலக மனித உரிமைகள் தினம் 2023 நிகழ்வு இம்மாதம் கடந்த 10 ஆம் திகதி இலண்டனின் பார்நெட் (Barnet) நகரில் இல் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடணப்படுத்தப்பட்ட உலகளாவிய மனித உரிமைகள் தினத்தை நினைவுகூறுவதோடு இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகவும் உலகெங்கிலுமுள்ள அனைத்து இனத்தினருக்கு எதிராகவும் இழைக்கப்பட்டு வரும் மனித உரிமை மீறல்களை நினைவு கூர்ந்து அவற்றுக்கு எதிராக குரல் கொடுக்கவும் அவற்றினை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தவும் TIC யினால் ஆண்டுதோறும் மனித உரிமைகள் தின நிகழ்வு நடாத்தப்பட்டு வருகின்றது.

அதன்படி ஐ.நா. மனித உரிமைகள் தினத்தை அறிமுகப்படுத்தி 75 ஆவது ஆண்டான நடப்பாண்டில் TIC யின் மனித உரிமைகள் தின நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி இலண்டனின் பார்நெட் (Barnet) நகரில் இல் நடைபெற்றது.

இலண்டன் பார்நெட் நகரில் அமைந்துள்ள Multi Cultural Community Centre இல் பிற்பகல் 2.00 மணிமுதல் 6.00 மணி வரை நடைபெறவுள்ளது.

அனைவருக்குமான கண்ணியம் சுதந்திரம் மற்றும் நீதி (Dignity, Freedom and Justice for All) என்ற கருப்பொருளை மையமாக் கொண்ட TIC யின் மேற்படி மனித உரிமைகள் தின நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமானது.

விபுலானந்த அடிகளார் நாவலர் கீர்த்திமாலை என்னும் நூலில் தமிழ்மொழி வாழ்த்து என்று குறிப்பிடப்பட்டுள்ள, இலங்கைத் தமிழர்களுக்கே உரித்தான தமிழ் மொழி வாழ்த்து பாடல் இசைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பார்னட் நகர மேயர் கவுன்சிலர் நாகுஸ் நரேந்திரா அவர்களும், சிறப்பு விருந்தினராக பிரித்தானியாவின் பார்னட் தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்களுக்கான பிரித்தானிய அனைத்து கட்சி பாராளுமன்ற குழுவின் துணைத்தலைவருமான மதிப்பிற்குரிய திரேசா வில்லியம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

அதே வேளை இந் நிகழ்வின் சிறப்பு பேச்சாளர்களாக கிங்ஸரன் பல்கலைக்கழகத்தின் சர்வதேச அரசியல் பேராசிரியரும் மனித உரிமை மற்றும் சமூக நீதியாளருமான கலாநிதி அன்டி கிகின்பொட்டம் (Dr Andy Higginbottom) அவர்களும் இனப்படுகொலைகளை தடுப்பதற்கான அனைத்துக்கட்சி பாராளுமன்ற குழுவின் இயக்குனர் அன்டி பெய்லி (Mr Andy Bailey) அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.


அத்துடன் மதத்தலைவர்கள் அரசியல் பிரமுகர்கள் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் கல்வியலாளர்கள் மற்றும் TIC யின் செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

**11 ஆம் பக்கம் பார்க்க**



























10 ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்நிகழ்வின் பிரதான சிறப்பம்சமாக TIC யினால் வழங்கப்படும் 2023 ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் விருதுகள் இம்முறை இருவருக்கு வழங்கப்பட்டது.

இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் இராணுவ அடக்கு முறைகளுக்கு எதிராக தொடர்ச்சியாக குரல் கொடுத்துவரும் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டத்தின் (ITJP) இயக்குனரும் முன்னாள் ஊடகவியலாளர் மனித உரிமை செயற்பாட்டாளர் மற்றும் ஐ.நா.வின் ஆலோசகருமான பிரான்சிஸ் ஹரிசன் (Frances Harrison) அவர்களுக்கும், தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக துணிச்சலுடன் செயலாற்றிவரும் ஊடகவியலாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான பாசனா அபேவர்த்த (Bashana Abeyawardane) அவர்களுக்கும் மேற்படி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

TIC யின் நிறுவனர்களில் ஒருவரும் முன்னாள் இயங்குனருமான மறைந்த வரதகுமார் அவர்களின் ஞாபகார்த்த விருது எழுத்தாளரும் மனித மரபியல் கல்வி ஆய்வாளருமான வைத்தியர் சிவா தியாகராஜா (Dr Siva Thiagaraja) அவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அத்துடன் பிரித்தானியாவில் தமிழர் பண்பாட்டு மையம் (Tamil Heritage Centre) ஒன்றை உருவாக்குற்கான தேவை தொடர்பிலான ஆவணப்படம் காண்பிக்கப்பட்டதுடன், அதற்கான திட்ட முன்மொழிவும் கோரிக்கையும் நகர மேயரிடம், TIC மற்றும் CCDயின் பண்பாட்டு பிரிவின் சார்பில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் சிறப்பு கலைநிகழ்வாக, அலன் பிரதீபன் அவர்களின் மனிஉரிமைகள் தொடர்பிலான “றப்” இசையும், இலண்டன் மெய்வெளி அரங்க கலைஞர்களின் “நான் புதைக்கப்பட்டவன்” என்ற சிறப்பு நாடகமும் இடம்பெற்றன. அத்துடன் தொண்டர்களுக்கான மதிப்பளிப்பு மற்றும் அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு என்பவையும் சிறப்புற இடம்பெற்றன.

இந்த நிகழ்வு TIC யின் பணிப்பாளர்களில் ஒருவரான திரு கீத் குலசேகரம் அவர்களின் தலைமையில் சிறப்பான முறையில் இடம்பெற்றதுடன், செயற்பாட்டாளர்களான செல்வன் டிலக்ஷன் மனோரஜன் மற்றும் செல்வி சுபமகிசா வரதராசா ஆகியோர் தொகுத்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



















நமது ஈழநாட்டின் வாழ்வாதார உதவித்திட்டம் இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த வாழ்வாதார உதவி தேவைப்படும் போராளி, மாவீரர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்வர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் வேண்டுகோளிற்கிணங்க மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் திருமதி யோ.ஜெஸ்லின் உதய ராணி மற்றும் செல்வி சே.ஜெஸ்லின் நித்தியராணி ஆகியோரின் 2 இலட்சம் ரூபா நிதிப்பங்களிப்பில் இந்த உதவித்திட்டம் வழங்கப்பட்டது.

அந்தவகையில் புலோப்பபளையைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி ஒருவருக்கு செயற்கைப் பாதமும் மற்றும் மாவீரர் குடும்பங்கள், போராளி குடும்பங்கள் மாற்றுத்திறனாளிகள் குடும்பங்கள் உள்ளடங்கலாக தெரிவு செய்யப்பட்ட 19 குடும்பங்களுக்கு அத்திய அவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.











